**O.S.No.17/2021**

வா.சா.1, திரு.கர்ணன்
நாள் : 29.08.2023 நேரம் : 12.10 P.M

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

1) தாவா சொத்து எனது தந்தைக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் கிரையம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். எனது தந்தை யாரிடமிருந்து எவ்வளவு தொகைக்கு தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தும் அதை சார்ந்த பகுதிகள் ஆதி திராவிடர் காலனிக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாவா சொத்தில் எந்தவிதமான வீடும் இல்லை என்று சொன்னால் இல்லை, காலனி வீடு கட்டப்பட்டுள்ளது. அந்த வீடு அழகம்மாளுக்கு அரசாங்கம் கட்டிக்கொடுத்த வீடு என்று சொன்னால் சரிதான், அதை எனது தந்தை அழகம்மாளிடமிருந்து கிரையம் வாங்கிவிட்டார்.

2) அழக்கம்மாள் எனது தந்தைக்கு தாவா சொத்தை கிரையம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு மின் இணைப்பு இல்லை என்று சொன்னால் உள்ளது. தாவா சொத்திற்கான மின் கட்டணத்தை யார் செலுத்துகிறார்கள் என்று சொன்னால் தற்போது வரை இலவச மின்சாரம் தான் பெற்று வருகிறோம். மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது. எனது தந்தை பெயரில் மின் இணைப்பு இருந்ததற்கான எந்த ஆதாரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா சொத்திற்கு வீட்டு வரி எனது தந்தை பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் தேதியோ, வரிசை எண்ணோ, வரி செலுத்துபவரின் கையொப்பமோ இல்லை

என்று சொன்னால் சரிதான். இந்த வா.சா.ஆ.2 ஆவணம் தாவா சொத்திற்குரியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

4) எனது தந்தை பெயர் ஆறுமுகம் என்றால் இல்லை, வெள்ளை என்ற உடையான் ஆகும். தாவா சொத்து வெள்ளை என்ற உடையனுக்கு தான் பாத்தியப்பட்டது என்று வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தினுடைய சர்வே எண்ணோ, பரப்பளவோ பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

5)எவ்வளவு இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் 3 செண்டு இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த 3 செண்டிற்கான நான்கு மால்களை குறிப்பிட முடியுமா என்றால் முடியாது என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பின்பு, அம்சம் வீட்டிற்கு வடக்கு, வேலு வீட்டிற்கு தெற்கு, பஞ்சாயத்து சாலை தெற்கு, வடக்கு ரோட்டிற்கு கிழக்கு, சேதுராமன் வீட்டிற்கு மேற்கு என்று கூறினார்.

6) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நான்குமால்களும், நான் குறிப்பிட்டுள்ள நான்குமால்களும் வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் தற்போது அவர்கள் தான் வீடு கட்டியுள்ளார்கள். பிராதில் தாவா சொத்தில் 16க்கு 20 அளவுள்ள வீடும், காலிமனையிடமும் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் இந்த அளவில் அந்த இடத்தில் வீடு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வீட்டின் கதவு எண் என்னவென்றால் தெரியாது.

7) 2ம் பிரதிவாதியின் பெயர் பால்துரை, ஆனால் அவரது உண்மையான பெயர் அரசு என்று சொன்னால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் சிங்காரம், கார்மேகம், தங்கராசு ஆகியோர் தாவா சொத்து தங்களுக்கும் பாத்தியப்பட்டது என்று கூறி எந்தவிதமான வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான். தாவா சொத்து இன்று வரை பிரிக்காமல் உள்ளது. எனது உடன்பிறந்த சகோதரிகள் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், அவர்கள் சொத்து வேண்டாம் என்று கூறிவிட்டார்கள்.

8) தாவா சொத்தை பிரதிவாதிகள் சட்ட விரோதமாக கைப்பற்ற எத்தனிக்கிறார்கள் என்று கூறியுள்ளீர்களோ அது எந்த தேதி என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை ஒப்படைப்பு பெற்ற அழகம்மாளின் கணவர் பெயர் சிவனான்டி என்பதை அழகர் மனைவி அழகம்மாள் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அழகம்மாளின் கணவர் பெயர் கூழகுஞ்சான் ஆவார். கூழகுஞ்சான் மனைவி அழகம்மாளிடமிருந்து தான் எனது தந்தை கிரையம் வாங்கியதாக எந்த ஆவணங்களும் இல்லை என்றால் அழகம்மாளிடமிருந்து தான் எனது தந்தை வாங்கினார்.

9) அழகம்மாள் தாவா சொத்தை அரசாங்கத்திடமிருந்து ஒப்படைப்பு மூலம் பெற்றதால் 30 ஆண்டுகள் வரை யாருக்கும் கிரையமோ, ஒத்தியோ, அடமானமோ செய்வதற்கு உரிமை இல்லாதவர் என்று சொன்னால் சரியல்ல. 7 ஆண்டுகளுக்குள் கிரையம் பெற்றிருப்பதால் வா.சா.ஆ.1 செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் இல்லததால் அழகம்மாள் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்துவிட்டு முனியாண்டி மனைவி அரசம்மாளுக்கு ஒப்படைப்பு உத்தரவு மூலம் 16.09.2021ம் தேதி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

10) நாளது தேதி வரை அரசம்மாள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவிதமான உரிமையோ, அனுபவமோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு தான் பாத்தியப்பட்டது

என்று கோரி விளம்புகை பரிகாரம் கோராததால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.43 P.M